# உங்கள் கிராமத்தில் கிடைக்க வேண்டிய சுகாதார சேவைகள்

***சாதி***, மதம், இனம், மொழி, ஊர், பாலினம், ஏழை மற்றும் பணக்காரன் எனும் எந்த பேதமும் இல்லாமல் ஒவ்வொரு குடிமகனுக்கும் தரமான இலவச சிகிச்சை அளிப்பது அரசின் கடமை. இதற்காக மக்களின் பல்லாயிரம் கோடி வரிப்பணத்தை அரசு செலவு செய்கிறது. அவ்வாறு செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் வாயிலாக கீழ்கண்ட சேவைகள் உங்கள் ஊரில் முற்றிலும் இலவசமாக கிடைக்க வேண்டும்.

- ***அடிப்படை சிகிச்சை:*** *மிக எளிதாக சிகிச்சை அளிக்கக்கூடிய காய்ச்சல், சளி, தலைவலி, வயிற்றுப்போக்கு மற்றும் உடல்வலி போன்றவற்றிக்கு உங்கள் கிராமத்திலேயே அனைத்து மருந்துகளும் கிடைக்கும். இதனை உறுதி செய்வது உங்கள் கிராம சுகாதார செவிலியர் மற்றும் சுகாதார ஆய்வாளரின் கடமையாகும்.*
- ***24 மணிநேர பிரசவ வசதி:*** *5000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையமும், அதில், 24 மணிநேரமும் பிரசவம் பார்ப்பதற்க்கு வசதியாகவும், தேவைக்கேற்ப சிறப்பு சிகிச்சைக்கு பரிந்துரை செய்யவும் கிராம சுகாதார செவிலியர் அங்கு தங்கியிருக்க வேண்டும்.*
- ***கர்ப்பிணிகளுக்கான சேவை:***
  - *கர்ப்பிணி தாய்மார்களை கண்டறிந்து பதிவு செய்து தொடர் பரிசோதனை செய்தல்.*
  - *தொடர்ச்சியாக எடை எடுத்தல்.*
  - *இரத்த அழுத்தம் கண்காணித்தல்; சிறுநீர் மற்றும் இரத்தப் பரிசோதனை செய்தல்.*
  - *இரத்த சோகை கண்டறியப்பட்டால் மாத்திரைகளை வழங்கி, சரியான உணவு முறைக்கு அறிவுறுத்துதல்.*
  - *மல்லாக்க படுக்கவைத்து அடிவயிற்றுப் பரிசோதனை செய்தல்.*
  - *இரண சன்னி தடுப்பூசி போடுதல்; வைட்டமின் 'ஏ' திரவம் அளித்தல்.*
  - *கர்ப்பம் குறித்து தகவல் மற்றும் ஆலோசனை அளித்து பிரசவத்துக்கு தயார்செய்தல். அபாய அறிகுறிகள் குறித்து விளக்குதல்*
- ***உதவித்தொகை:*** *கர்ப்பிணி பெண்களும், தாய்மார்களும் சத்தான உணவு சாப்பிட வேண்டும் என்பதற்காக அரசு ரூபாய் 6000/-த்தை டாக்டர் முத்துலட்சுமி திட்டத்திலும், மருத்துவமனையில் நடக்கும் பிரசவத்துக்கு ரூ.700/- அல்லது வீட்டில் நடக்கும் பிரசவத்திற்கு ரூ.500/- என முதல் இரு பிரசவத்திற்கு வறுமைகோட்டில் உள்ள பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இதனை வாங்கித்தருவது கிராம செவிலியரின் கடமையாகும்.*
- ***பேறுகால சேவை:*** *பிரசவித்த பின்னர் ஒரு வாரத்திற்குள் வீட்டிற்கு வந்து பரிசோதனை செய்து தாய்ப்பால் அளிப்பதன் முக்கியத்துவம், குழந்தை வளர்ப்பு, கருத்தடை முறைகள் மற்றும் சத்துணவு குறித்து ஆலோசனை வழங்க வேண்டும்.*
- ***குழந்தை நலன்:*** *(5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும்)*
  - *மாதந்தோறும் எடை எடுக் வேண்டும். எடை உயர்வு குழந்தை வளர்ச்சியை உறுதி செய்யும்.*
  - *வைட்டமின் 'ஏ' திரவம் அளித்தல். உரிய காலங்களில் தடுப்பூசிகளை போடுதல். (பி.சி.ஜி., முத்தடுப்பு ஊசி, தட்டம்மை, போலியோ சொட்டு மருந்து)*
  - *குழந்தையின் வளர்ச்சிக்கும், மூளை வளர்ச்சிக்கும் சத்தான உணவு அவசியம். அதனை உறுதி செய்ய அங்கன்வாடியில் குழந்தைகளுக்கு எடை எடுக்கப்பட்டு சத்துணவு அளிக்கப்பட வேண்டும். மேலும் குழந்தை வளர்ப்பு முறைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அங்கன்வாடி மையம் மிக முக்கியமானதாகும்.*

- ***மருத்துவ முகாம்:***

    - கிராமத்தில் மருத்துவ முகாம்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு தாய்நலன், குழந்தைகள் நலன் காக்கப்பட வேண்டும். மேலும் வயிற்றுப்போக்கு ,நிமோனியா போன்றவற்றிக்கு ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை அளிக்கப்படவேண்டும்.
    - வளரிளம் பருவத்தினருக்கு கூட்டங்கள் நடத்தி அவர்களின் உடல், மனநல பிரச்சனைகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கவேண்டும். தேவைப்படுவோருக்கு இரும்புச்சத்து மாத்திரைகளை அளிக்கவேண்டும்.
    - மருத்துவர், கிராம சுகாதார செவிலியர் மற்றும் சுகாதார ஆய்வாளர் பள்ளிகளில் தொடர்ச்சியாக மருத்துவ முகாம் நடத்தி குழந்தைகளின் உடல், மனநலம் பிரச்சனைகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கவேண்டும்.

- ***அவசர ஊர்தி:*** *அரசு 24 மணிநேர **'அவசர ஊர்தி'** வசதியை ஒவ்வொரு ஒன்றியத்திலும் அமைத்துள்ளது. இந்த சேவைக்கு **'1056'** என்ற எண்ணை தொடர்புகொள்ளலாம். பிரசவத்திற்கு இந்த சேவை இலவசமாக கிடைக்கும். மற்ற அவசர தேவைக்கு **'கிராம சுகாதார துப்புரவு குழுவின்'** நிதி ரூ.10000/-த்தை பயன்படுத்தலாம்.*

- ***கிராம சுகாதார துப்புரவுக் குழு:***

    - ஒவ்வொரு பஞ்சாயத்து கிராமத்திலும் கிராம சுகாதார துப்புரவுக் குழு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதில் பஞ்சாயத்து தலைவர், மருத்துவர், செவிலியர், சுகாதார ஆய்வாளர், அங்கன்வாடி ஊழியர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்க வேண்டும். இதில் குறிப்பாக சமுதாயத்தில் அனைத்து பிரிவினரும் (ஒடுக்கப்பட்டோர் மற்றும் 50% பெண் பிரதிநிதிகள்) இடம்பெற்றிருக்கவேண்டும்.
    - இக்குழு ஆரம்ப சுகாதார நிலைய, துணை சுகாதார நிலைய சேவைகள் மற்றும் பணியாளர்கள் சேவை குறித்து கண்காணிக்கும் அதிகாரமும், பொறுப்பும் கொண்டது.
    - கிராம சபை கூட்டங்களில் இக்குழு சுகாதார நடவடிக்கைகளை பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இதனை அமல் செய்வது மருத்துவ பணியாளரின் கடமையாகும்.
    - இக்குழுவின் பொறுப்பில் கிராம சுகாதார திட்டங்களை நிறைவேற்ற ஆண்டு தோறும் ரூ.10000/-த்தை இக்குழுவிற்கும், துணை சுகாதார நிலைய செயல்பாட்டிற்காக ரூ.10000/-த்தையும் அரசு வழங்குகிறது.

**மேற்கண்ட சுகாதார சேவைகள் அனைத்தையும் பெறுவது உங்கள் உரிமை !**

**உங்களுக்கு கிடைக்கச்செய்வது அரசின் கடமை !!**

உங்கள் சிந்தனைக்காக ......

- அரசு மருத்துவமனைகள் அனைத்திலும் போதுமான அளவுக்கு மருந்துகள், ஊசிகள், கையுறைகள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே நாம் வெளியிலிருந்து வாங்கித்தர வேண்டியதில்லை. அதையும் மீறி நிர்பந்தித்தால் முறையாக மருத்துவரிடம் கையெழுத்திட்டு சீட்டு வாங்குங்கள்.
- இந்த திட்டங்கள் உங்கள் வரிப்பணத்திலேயே செயல்படுத்தப்படுகின்றன. ஆகவே உங்கள் சிகிச்சைக்காக மறுபடியும் பணம் கொடுக்கத் தேவையில்லை. ஊழியர் சேவைக்காக லஞ்சம் கொடுக்கவேண்டாம்.

---

**தேசிய ஊரக சுகாதாரச் சேவைகள் – மக்கள் கண்காணிப்பு மற்றும் திட்டமிடல் (முதற் கட்டம்)**

மாநில ஒருங்கிணைப்பு: **தமிழ்நாடு அறிவியல் இயக்கம்**

வெளியீடு : **மக்கள் நலவாழ்வு இயக்க உறுப்பினர்கள்**

☸ தமிழ்நாடு அறிவியல் இயக்கம் (TNSF) ☸ தன்னார்வ நல நிறுவனம் - கன்னியாகுமரி (VHA-K)

☸ கத்தோலிக்க நல நிறுவனம் - தமிழ்நாடு (CHAT) ☸ அருள்செல்வி மக்கள் மறுவாழ்வு நிறுவனம் (DCBR)

☸ *தர்மபுரி தன்னார்வ நல நிறுவனங்களின் கூட்டமைப்பு* (DHVANI)

**மேலும் தகவலுக்கு :**